JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- - Dw- 1- Witness
for Prosecution

STC No. 322/2022 Crime No. – Station -

| | | | |
|---|---|---|---|
| Name | **Dw1 சசிதரன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 15.07.2026 | | | |

Accused was informed by this court that he is not required to depose as witness in this case and that any incriminating facts deposed by him will be taken as evidence against him in the case. Accused understood the consequences of deposing as witness and expressed his willingness to depose as defense witness D.W.1. Accused filed petition U/s 315 CrPC and it was allowed by this court on 15.07.2026

**எதிரி ஆஜர்**
**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் எதிரி ஆவேன். நான் கோயம்புத்தூரில் உள்ள துடியலூரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 2012 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் நானும், எனது மனைவியும் பிரதீபா கேக் ஷாப் ஒன்று ஆரம்பித்து நடத்தி வந்தோம். எனது தாய் மாமன் முருகேசன் மற்றும் எனது சித்தி மகன் சுகுமார் மூலம் எனக்கு ராயல் இன்டர்நேஷனல் பள்ளியின் முதல்வர் அன்பழகன் அறிமுகமானார். அப்போது அன்பழகன் தான் மாதம் சீட்டு நடத்தி வருவதாக என்னிடம் கூறினார். அப்போது அவர் மேற்படி சீட்டில் கலந்து கொண்டால் என்னுடைய தொழிலுக்கும் பயன்படும் என்று அவர் கூறினார். அதிலிருந்து நான் கடந்த 2015 ஆம் ஆண்டில் இருந்து அன்பழகன் என்பவரிடம் சீட்டு போட்டு வந்தேன். அப்போது நான் அன்பழகன் போட்ட சீட்டில் ஒரு சீட்டை ஏலத்தில் எடுத்தேன்.

மேற்படி சீட்டை எடுத்ததற்கு பாதுகாப்பிற்காக என்னுடைய ஐசிஐசிஐ பேங்க் காசோலைகள் 031683, 031684, 031685 மற்றும் 031686 ஆகிய நான்கு காசோலைகளை

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 14:40:21 +0530

அவரிடம் கொடுத்தேன். மேற்படி சீட்டானது 2018 ம் ஆண்டு முடியும் போது அவர் ரூ.30,00,000/–திற்கு சீட்டு ஆரம்பிக்க உள்ளதாகவும், அது 30 மாதங்களில் முடிந்து விடும் என்று என்னிடம் கூறினார். நானும் எனது தொழிலை மேம்படுத்த மேற்படி சீட்டில் கலந்து கொண்டு பணம் எடுத்தால் தொழில் மேம்படும் என்பதற்காக மேற்படி சீட்டில் கலந்துகொண்டு 2 சீட்டு போட்டேன். நான் சீட்டு ஆரம்பித்து ஐந்து மாத சீட்டுகளுக்குள் எனக்கு கிடைத்தால் தான் எனது தொழிலை மேம்படுத்த நன்றாக இருக்கும் என்று அவரிடம் கூறினேன். நான் ஏற்கனவே அவரிடம் சீட்டு போட்டதால் அவரும் அதற்கு சம்மதித்தார். நான் மேற்படி ரூ.30,00,000/– சீட்டில் 2 வது ஏலச் சீட்டில் ரூ.18,86,000/– என பணம் எடுத்தேன். அப்போதும் மேற்படி பணத்திற்கு ஆதரவாக என்னுடைய நிரப்பப்படாத கையொப்பம் மட்டும் செய்த ஐசிஐசிஐ வங்கி இரண்டு காசோலைகளான 526563 மற்றும் 526562 ஆகியவற்றை அவரிடம் கொடுத்தேன். மேற்படி ஏலச் சீட்டில் எடுத்த பணம் எனக்கு போதுமானதாக இல்லை என்பதால் நான் மீண்டும் 4வது ஏலச் சீட்டில் கலந்து கொண்டு ரூ.19,45,000/– பணம் எடுத்தேன்.

அப்போது மேற்படி பணத்திற்கு ஆதரவாக எனது மனைவியின் நிரப்பப்படாத கையொப்பம் மட்டும் செய்த ஐசிஐசிஐ வங்கியின் 006683 மற்றும் 006684 என்கிற இரண்டு காசோலைகள் அவரிடம் கொடுத்தேன் மற்றும் நான் நடத்தி வந்த கேக் ஷாப்பின் இரண்டு காசோலைகள் நிரப்பப்படாமல் கையொப்பம் மட்டும் செய்து அவரிடம் கொடுத்தேன். ஏல சீட்டு பணத்தை ஏலம் நடத்தியதிலிருந்து 15 நாட்களுக்குள் பணம் கட்ட வேண்டும். மேலும் அன்பழகன் என்னிடம் மேற்படி ஏலச்சீட்டு பணத்தை வங்கியில் செலுத்த கூடாது என்றும், அவரது ஆட்கள் நேரடியாக கோயம்புத்தூரில் வந்து பணத்தை வாங்கிக் கொள்வார்கள் அல்லது நான் பவானி வரும்போது அவரிடம் பணத்தை கையில் ரொக்கமாக கொடுத்து விடுவேன். ஒரு சில நேரம் என்னாலும் பவானி வர முடியவில்லை என்றாலும், அன்பழகன் நானும் அங்கு வந்து பணத்தை பெற முடியவில்லை என்றால், நான் அன்பழகன் நடத்தி வந்த பள்ளி ராயல் இன்டர்நேஷனல் பள்ளியின் வங்கிக் கணக்கில் பணத்தை செலுத்தி விடுவேன். நான் ஏலச்சீட்டுக்காக அவருக்கு செலுத்தும் பணத்திற்கு ஆதரவாக எனது Whatsappல் ஏலச்சீட்டிற்க்கு பணம் எவ்வளவு செலுத்தப்பட்டது என்பது குறித்து பதில் கொடுப்பார். நானும் பணம் செலுத்தியது தொடர்பாக எனது Whatsapp மூலம் அவருக்கு தகவல் தெரிவிப்பேன். நான் வங்கியின் மூலம் ஏல சீட்டுக்கு பணம் செலுத்தினால் எனது whatsapp மூலம் மேற்படி செலுத்தியதற்கான ரசீதை அவருக்கு அனுப்புவேன்.

மேலும் 2020 ஆம் ஆண்டு கொரோனா காலகட்டம் என்பதால் எனது தொழிலில் எனக்கு போதிய வருமானம் இல்லை என்பதால் நான் சீட்டு எடுத்த பணத்திற்கு என்னால் உரிய காலத்திற்குள் பணம் செலுத்த முடியவில்லை. மேலும் நான் சேர்ந்த ரூ.30,00,000/– ஏலச்சீட்டானது கொரோனா காலகட்டத்தில் முடிந்து விட்டது. நான் மேற்படி ஏலச் சீட்டுக்கு ஒரு தொகை கொடுக்க வேண்டி இருந்தது. அதற்கு அன்பழகன் இரண்டு

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 14:40:26 +0530

மாதத்திற்குள் செலுத்துமாறு என்னிடம் கூறினார். நானும் அவர் கொடுத்த இரண்டு மாத காலத்திற்குள் அவருக்கு கொடுக்கவேண்டிய சீட்டு பணத்தை கொடுத்து விட்டேன். அதற்கு பின்னிட்டு நானும் எனது மனைவியும் தொழிலுக்காக மாத சம்பளத்திற்கு வேலைக்கு சென்று விட்டோம். அதற்கு பின்னிட்டு அன்பழகன் என்பவரிடமிருந்து எந்த தொலைபேசி அழைப்பும் எனக்கு வரவில்லை. மேலும் எனக்கு அன்பழகன் நடத்தி வந்த சீட்டில் தொடர விருப்பம் இல்லாததால், நான் அவரிடம் கொடுத்த காசோலைகளை திருப்பித் தருமாறு கேட்டேன். அவர் கணக்கு வழக்குகளை முடித்துவிட்டு வாங்கிக் கொள்ளுமாறு என்னிடம் கூறினார். மீண்டும் நான் அவரிடம் இரண்டு மாதம் கழித்து கேட்டபோது அவர் நான் ஏல சீட்டு பணத்தை கால தாமதமாக கட்டியதால் அதற்கு வட்டி செலுத்த வேண்டும் என்று என்னிடம் கூறினார். அப்போது நான் அவரிடம் தற்போது நான் தொழில் எதுவும் செய்து வரவில்லை என்றும், மாத சம்பளத்திற்கு தான் வேலைக்கு நானும், எனது மனைவியும் சென்று வருகிறோம் என்றும், அதனால் என்னால் சீட்டு பணத்தை மட்டும் தான் கட்ட முடியும் என்று அவரிடம் கூறினேன். அதற்கு பின்னிட்டு 6 – 7 மாதங்களுக்கு பிறகு 2022 ஆண்டு மார்ச் மாதம் என்னுடைய காசோலை திருப்பட்டதாக கூறி எனது தொலைபேசிக்கு SMS ஒன்று வந்தது.

அதற்கு அடுத்து இரண்டு நாட்கள் கழித்து எனது மனைவியின் தொலைபேசி எண்ணிற்கும் காசோலை திருப்பப்பட்டதாக கூறி SMS வந்தது நானும், எனது மனைவியும் காசோலை திருப்பப்பட்டது குறித்து எங்களது வங்கி கணக்கு உள்ள ஐசிசி வங்கியில் கேட்டபோது வழக்கு காசோலையானது, சீனிவாசன் என்பவர் எனது காசோலையை பவானியில் உள்ள மெர்க்கன்டைல் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்ததாகவும், எனது மனைவியின் காசோலையை சத்யபிரியா என்பவர் கரூர் வைசியா வங்கியில் தாக்கல் செய்ததாக எங்களிடம் தெரிவித்தார்கள். அதற்கு பின்னிட்டு காசோலை யாரிடம் கொடுத்தேன் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. இரண்டு நாட்கள் கழித்து என்னுடைய காசோலை புத்தகத்தை பார்க்கும் போது மேற்படி காசோலைகள் அன்பழகன் என்பவரிடம் சீட்டு நடத்தும் போது பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட காசோலை என தெரிய வந்தது. அதற்கு பின்னிட்டு அன்பழகன் என்பவரும் என்னை தொடர்பு கொள்ளவில்லை. நானும் அவரை தொடர்பு கொள்ளவில்லை.

அதற்கு பின்னிட்டு பத்து நாட்கள் கழித்து என்னுடைய காசோலையை மீண்டும் வசூலுக்கு அதே பெயரில் தாக்கல் செய்துள்ளார்கள். அதற்குப் பின்னிட்டும் நான் அன்பழகனை தொடர்பு கொள்ள முடியவில்லை. மேலும் 10 நாட்கள் கழித்து எனக்கு சட்ட அறிவிப்பு ஒன்று வந்தது. எனக்கு நீதிமன்றம் குறித்த எந்த நடவடிக்கையும் தெரியாததால் மேற்படி சட்ட அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. அதற்கு பின்னிட்டு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததன் மூலம் நான் எனது வழக்கறிஞரிடம் என்ன நடந்ததோ அனைத்து சங்கதிகளையும் சொல்லி இந்த வழக்கை நடத்தி வருகிறேன். எனக்கும், இந்த வழக்கின் புகார்தாரர் சீனிவாசனுக்கும் எந்த

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.15 14:40:31 +0530

பரிவர்த்தனையும் நடந்ததில்லை. எனது மனைவியும் சத்திய பிரியா என்பவரிடம் பணம் எதுவும் வாங்கவில்லை. காசோலையும் கொடுக்கவில்லை. நான் கொடுத்த காசோலைகள் அனைத்தும் அன்பழகன் என்பவரிடம் பாதுகாப்பிற்காக நிரப்பப்படாத கையொப்பம் மட்டும் செய்த காசோலைகள் ஆகும். என்னை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். நானும் அன்பழகன் என்பவரும் whatsapp மூலம் பேசிக் கொண்டதை BSA 63A சான்றிதழ் உடன் இணைத்து தாக்கல் செய்கிறேன். இப்படி **நானும் அன்பழகனும் whatsapp மூலம் பேசிக் கொண்ட விவரம் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.15 14:40:37 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**